**சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.38/2020

நாள்: 03.11.2025.

வா.சா. 1 – சிவசங்கரி

2025–ம் ஆண்டு நவம்பர் 03–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.24–ல் கண்ட சொத்துக்களில் நானும், என் தாயார் 3ம் பிரதிவாதி மலர்க்கொடியும், 1ம் பிரதிவாதி செல்வராணியும் சேர்ந்து பாலச்சந்திரன் என்பவரிடம் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் பாலச்சந்திரனிடம் எந்தவித கிரைய பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 24–ல் கண்ட சொத்தை பாலச்சந்திரன் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். மேற்கண்ட சொத்தை பாலச்சந்திரன் 4ம் பிரதிவாதி சின்னதுரையிடம் விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். நானும், என் தாயார் 3ம் பிரதிவாதி மலர்க்கொடியும், 1ம் பிரதிவாதி செல்வராணியும் சேர்ந்து சின்னதுரைக்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரையத் தொகையை சின்னதுரையிடம் இருந்து பாலச்சந்திரன் வாங்கிக்கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.24–ல் கண்ட சொத்து என்னுடைய பாகத்தை ஈடுசெய்வதற்காக விற்பனை செய்யப்பட்டதா என்றால் இல்லை. பாலச்சந்திரனிடம் வா.சா.ஆ.24–ல் கண்ட சொத்தை விற்பனை செய்த தொகையைக் கொண்டு தான் எனது திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். வா.சா.ஆ.24–ல் கண்ட சொத்து என்னுடைய பாகவிகிதத்தை சரி செய்வதற்காக விற்பனை செய்யப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நான்

தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24 ஆவணம் ஏற்பட்ட பின்பு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது நான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கில் வா.சா.ஆ.24 சொத்தையும் சேர்த்தும் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24–ல் கண்ட சொத்தை நான் வழக்கில் சேர்க்காத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.